[2015 பிப்ரவரி 18

*மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரை மீதான விவாதத்தின் போது zero hour இல்லையென்பது மூத்த உறுப்பினர்கள் அனைவருக்கும் தெரியும். அதனால் சபை நடவடிக்கைகளை நடத்த ஒத்துழைப்புக் கொடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். ஆளுநர் உரை மீதான விவாதம் நடப்பதால் இப்போது zero hour இல்லை. (குறுக்கீடு) அதையெல்லாம் பட்ஜெட் கூட்டத்தில் பேசிக்கொள்ளலாம். உங்களுடைய உறுப்பினர் பேசும்போது நீங்கள் என்ன பிரச்சினையை நேரம் இல்லா நேரத்தில் எடுக்க வேண்டுமென்று கருதுகிறீர்களோ அதைப் பேசிக்கொள்ளுங்கள். ஆகவே, சபையை நடத்துவதற்கு ஒத்துழைப்புக் கொடுங்கள். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, நீங்களே இந்த அவையிலே பலமுறை பேசியிருக்கிறீர்கள், zero hour-ல் பேசக்கூடாது என்று. கவர்னர் உரை மீதான விவாதம் இருக்கும்போது zero hour இல்லையென்று நீங்களே ஒத்துக்கொண்டிருக்கிறீர்கள். உங்களுடைய கட்சி உறுப்பினர் விவாதத்தில் பேசும்போது பேசட்டும். உட்காருங்கள். (குறுக்கீடு) இல்லை, உங்களுடைய கட்சி உறுப்பினர் பேசும்போது பேசலாம், உட்காருங்கள். நீங்கள் நாளைக்குப் பேசும்போதும் பேசலாம், உட்காருங்கள். Zero hour என்பது விதியில் இல்லை. (குறுக்கீடு) நீங்கள் பேசும்போது பேசுங்கள். (குறுக்கீடு) Zero hour இன்று கிடையாது. ஆளுநர் உரை விவாதத்தின்போது, Zero hour என்று அனுமதிப்பதில்லை.

முற்பகல் 11-40

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) விவாதத்தில் உங்களுடைய கட்சி உறுப்பினர்கள் பேசுகின்றபோது நீங்கள் என்ன பேச வேண்டுமென்று கருதுகிறீர்களோ அதைப் பேசுவதற்கு வாய்ப்பிருக்கிறது. (குறுக்கீடுகள்) வெளிநடப்புச் செய்ய வேண்டுமென்பதற்காகத் தேவையில்லாமல் நீங்கள் இப்படியெல்லாம் செய்யாதீர்கள். உங்களுக்குப் பேச வாய்ப்பு இருக்கிறது. (குறுக்கீடு) வாய்ப்பு மறுக்கப்படவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தற்போது நடைபெறப் போவது பொதுவான விவாதம். அந்த விவாதத்தில் நீங்கள் என்ன வேண்டுமானாலும் பேசுங்கள். அதில், உங்களுக்குப் பதில் கிடைக்கும்; அப்போது பேசுங்கள் உங்களுக்குப் பதில் கிடைக்கும்.

2015 பிப்ரவரி 18]   [பேரவைத் தலைவர்]

உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, நீங்கள் விவாதத்தில் பேசும்போது பேசலாம், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, நீங்கள் பேசும்போது இதைப் பற்றிப் பேசலாம், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் பேசும்போது இதைப் பற்றிப் பேசலாம், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் பேசுவது எதுவும் அவைக் குறிப்பில் ஏறாது, உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர்.)

(புதிய தமிழகம் கட்சி உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவையிலிருந்து வெளியேறினார்.)

4. அறிவிப்பு

மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 9(1)-ன்கீழ் கீழ்க்காணும் உறுப்பினர்களை இப்பேரவையின் 10-வது கூட்டத்தொடருக்கான மாற்றுத் தலைவர்களாக (Panel of Chairmen) நியமிக்கிறேன்:

திரு. அ. பாப்பா சுந்தரம்

திரு. ஓ.கே. சின்னராஜ்

திரு. கே.பி. அன்பழகன்

திரு. ஆர். சின்னசாமி

திரு. பி.ஜி. நாராயணன்

முனைவர் செ.கு. தமிழரசன்.

5. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை முன்மொழிதல். மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், பேரவைத் துணைத் தலைவர் அவர்கள்.